# உஸ்பெகிஸ்தான் அதிபருடன் பிரதமரின் சந்திப்பு

டிசம்பர் 01, 2023

ஐக்கிய அரபு அமீரகத்தில் 1 டிசம்பர் 2023 அன்று நடைபெற்ற சிஓபி-28 உச்சிமாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு ஷவ்கத் மிர்சியோயேவை சந்தித்தார்.

உலகளாவிய தெற்கின் குரல் உச்சிமாநாட்டில் உஸ்பெகிஸ்தானின் பங்காற்றியதற்காக அதிபர் மிர்சியோயேவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

சுகாதாரம், கல்வி, மருந்துகள் மற்றும் பாரம்பரிய மருத்துவம் ஆகிய துறைகளில் தங்களின் பரந்த அளவிலான இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். உஸ்பெகிஸ்தானுடனான நமது வளர்ச்சிக் கூட்டாண்மையை விரிவுபடுத்த இந்தியாவின் ஆதரவையும் பிரதமர் உறுதியளித்தார்.

**துபாய்**
**டிசம்பர் 01, 2023**